# இலவச கையேடு வழங்கும் விழா

முத்துப்பேட்டை, ஜன-6.

முத்துப்பேட்டை அருகே உள்ள திருவாரூர் ராம்கோ தொண்டு நிறுவனம், சென்னை பூமிகா டிரஸ்ட்டுடன் இணைந்து நடத்தி வரும் இலவச மாலை நேர சிறப்பு வகுப்பில் பயிலும் மாண வர்களுக்கு இலவச் கையேடு வழங்கும் விழா நடைபெற்றது. ராம்கோ தொண்டு நிறுவன இயக் குனர் சி. ஜீவாணந்தம் தலைமை வகித்து கையேடுகளை, வழங்கி னார். கண்ணன், உஷா ஆகி யோர் பயிற்சி அளித்தனர். கவி ஞர் சரோஜ்ராம், கதிர்வேல், ஜாம் பாவன் இளைஞர் நற்பணி மன் றத்தலைவர் கண்ணன், சுவாமி விவேகானந்தா சர்வோதய மக ளிர் மைய ஒருங்கிணைப்பாளர் ஓவியர் குமார் மற்றும் பயிற்சி ஆசிரியைகள் பங்கேற்றனர். திட்ட ஒருங்கிணைப்பாளர். அய்யப்பன் வரவேற்று பேசினார் இறுதியில் மாரிச்செல்வி நன்றி கூறினார்.